பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான

# சென்னை காட் டேலண்ட் போட்டி

## மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவிப்பு

**சென்னை, ஆக. 11-** சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை:

இந்திய சுதந்திரத்தின் 75வது ஆண்டு விழாவை கொண்டாடிடும் வகையில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சென்னையில் உள்ள இந்திய தொழில் துறை கூட்டமைப்பின் யங் இந்தியன்ஸ் உடன் இணைந்து 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கான, பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகள், கல்லூரி மாணவர்களுக்கான "இந்தியா 75 இளைஞர் மாநாடு" மற்றும் சென்னை தினத்தை (22ம் தேதி) கொண்டாடிடும் வகையில் சென்னை காட் டேலண்ட் போட்டிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளை இணையவழியில் நடத்தவுள்ளது.

தற்போது பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகள் மற்றும் சென்னை காட் டேலண்ட் ஆகியவற்றுக்கான பதிவுகள் நடைபெற்று வருகின்றன. பள்ளிகளுக்கு இடையிலான போட்டிகளுக்கான பதிவுகள் நாளை (12ம் தேதி) வியாழக்கிழமை முடிவடைகிறது. சென்னை காட் டேலண்டிற்கான பதிவுகள் வரும் 15ம் தேதி ஞாயிற்றுக்கிழமை முடிவடைகிறது. "இந்தியா 75 இளைஞர் மாநாடு" போட்டி நாளை (12ம் தேதி) வியாழக்கிழமை நடைபெறுகிறது. மேற்கூறிய போட்டிகளில் பங்குப்பெற விருப்பம் உள்ளவர்கள்

மற்றும் கூடுதல் விவரங்களை பெறுவதற்கு *yiyuva.in/schools* என்ற இணையதளத்தை பயன்படுத்தவும். அதேபோல், இந்தியா 75 இளைஞர் மாநாடு போட்டிக்கு *youngindians.glueup.com* என்ற இணையதளத்தை பயன்படுத்தவும். மேலும், சென்னை காட் டேலண்ட் போட்டியில் பதிவுசெய்யமற்றும்வீடியோ பதிவேற்றம் செய்ய *yiyuva.in* என்ற இணையதளத்தை பயன்படுத்திக்கொள்ளவும். மாணவர்கள் மற்றும் பொது மக்கள் இணைய வழியில் நடைபெறும் இந்த போட்டிகளில் அதிக அளவில் பங்குப்பெற்று இந்நிகழ்ச்சிகளை சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.